## பேரூராட்சிகள் இயக்குநர், குறளகம், சென்னை 108 அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை:– திரு.சு.பழனிசாமி, இ.ஆ.ப.,

ந.க.எண்.1165/2018/அ7

நாள்: 15.02.2019

**பொருள்:** பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – தமிழ்நாடு பேரூராட்சி சார்நிலை பணி – சிறப்பு பணி விதிகள் – 01.01.2018ம் தேதிய நிலையில் வெளியிடப்பட்ட செயல் அலுவலர் (சிறப்புநிலை)க்கான தற்காலிக முன்னுரிமை பட்டியல் இறுதி செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்ட பட்டியலாக வெளியிடுதல் – ஆணையிடப்படுகிறது

**பார்வை:**

1. அரசாணை(ப) எண்.270 ஊரக வளர்ச்சி துறை, நாள் 4.4.1990
2. அரசாணை எண்.62 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 18.04.2009
3. அரசாணை(ப) எண்.42 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.1) துறை நாள் 18.04.2012
4. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.6793/2009/அ7 நாள் 12.07.2013
5. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.12592/2015/அ7 நாள் 22.03.2017 , 22.01.2018
6. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.1165/2018–3/அ7 நாள்.16.02.2018
7. இவ்வியக்கக செயல்முறைகள் ந.க.எண்.1165/2018–2/அ7 நாள் 30.08.2018

*****

**ஆணை :**

பேரூராட்சிகள் நிர்வாகத்தில் அனைத்து செயல் அலுவலர் நிலையில் மாநில அலகு நிர்ணயம் செய்து பார்வை 1ல் காணும் தமிழ்நாடு பேரூராட்சி சார்நிலை பணி விதிகளுக்கு உரிய விதித்திருத்தங்கள் வெளியிடப்பட்டதன் தொடர்ச்சியாக பார்வை 4ல் கண்டுள்ளபடி அனைத்து செயல் அலுவலர்/உதவியாளர்/தலைமை எழுத்தருக்கான உறுதி செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல் வெளியிடப்பட்டது. அதன் தொடர்ச்சியாக இறுதியாக பார்வை 5 மற்றும் 7ல் காணும் இவ்வியக்கக செயல்முறைகளின்படி 01.01.2012 முதல் 01.01.2017ம் தேதிய நிலை சிறப்பு நிலை செயல் அலுவலருக்கான இறுதி செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பார்வை 7ல் காணும் செயல்முறைகளின்படி 01.01.2018ம் தேதிய நிலையில் வெளியிடப்பட்டுள்ள சிறப்புநிலை செயல் அலுவலருக்கான தற்காலிக முன்னுரிமை பட்டியலானது பரிசீலிக்கப்பட்டு இறுதி செய்யப்பட்டதன் அதனடிப்படையில் 01.01.2018ம் தேதிய நிலையில் சிறப்புநிலை செயல் அலுவலருக்கான உறுதி செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல் இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

மேற்காண் இறுதி செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல் பேரூராட்சிகள் துறை இணையதள முகவரியான **www.tn.gov.in/dtp** -ல் வெளியிடப்பட்டுள்ளது. இம்முன்னுரிமை பட்டியலினை